# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 08.10.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா 28, வசனம் 84 மற்றும் சூரா 27, வசனம் 15 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள்: இந்த மறுமை வீட்டை பூமியில் தற்பெருமையையும் குழப்பத்தையும் விரும்பாதவர்களுக்காக நாம் ஏற்படுத்தியுள்ளோம். (நல்ல) முடிவு இறையச்சம் உடையவர்களுக்கே ஏற்படும். (28:84)**

**அவர்களின் உள்ளங்கள் அவற்றை நம்பியிருந்த அதே வேளையில் அநியாயமாகவும், ஆணவத்துடனும் அவற்றை அவர்கள் மறுத்தனர். எனவே, குழப்பம் விளைவித்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைப் பார்ப்பீராக. (27:15)**

நன்மை, தீமை, எளிமை, பெருமை, அன்பு, குழப்பம், கிளர்ச்சி, கட்டுப்படுதல், பகைமை இவ்வாறு நன்மையான பல குணங்களையும், தீய விஷயங்கள் பலவும் நமக்கு தென்படுகின்றன.

இவற்றில் ஒரு பிரிவினர் ரஹ்மானாகிய இறைவனின் அடையாளத்தைக் கண்டு அவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்பவர்கள் ஆவர். இன்னொரு பிரிவினர் ஷய்த்தானின் மடியில் வீழ்ந்தவர்கள் ஆவர். இவர்கள் இருவரும் ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு பிரிவினர்கள் ஆவர்.

இறைவன் நன்மை செய்யுமாறு கட்டளையிடும் போது ஷய்த்தான் அதனை தடுக்கின்றான். இறைவன் எந்த தீமைகளை செய்யக் கூடாது என்கிறானோ அதனை செய்யுமாறு ஷய்த்தான் கட்டளையிடுகிறான். இந்த கட்டுப்படாமை ஷய்த்தானுடைய அம்சத்தில் உள்ளது. இதனைப் பற்றி இறைவன் ஓரிடத்தில் கூறுகிறான்.

**நிச்சயமாக ஷய்த்தான் அளவற்ற அருளாள(னாகிய இறைவ) னுக்கு மாறு செய்பவனாவான். (19:45)**

ஷய்த்தானின் பின்னால் செல்பவர்கள் நிச்சயமாக இறைவனின் பிடியின் கீழ் வந்து விடுகின்றனர்.

நான் ஆரம்பத்தில் ஓதிய இரு வசனங்களின் மொழியாக்கத்தைக் கேட்டீர்கள். இதில் இரண்டு வகையான மக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஒரு பிரிவினர் பெருமை மற்றும் குழப்பத்திலிருந்து விலகியிருப்பவர்கள் ஆவர். இவர்கள் ரஹ்மான் (ஆகிய அருளாளன்) உடைய அடியார்கள் ஆவர். மற்ற பிரிவினர் அநீதியும் குழப்பமும் செய்பவர்களும் பெருமையடிப்பவர்களுமாகிய ஷய்த்தானின் அடியார்கள் ஆவார்கள்.

எனவே அல்லாஹ்வின் சுன்னத்திற்கேற்ப இந்த பிரிவினர் தீய முடிவையும் அடைகின்றனர். துரதிஷ்டவசமாக நமது நாடாகிய பாகிஸ்தானில் உலகின் பல பகுதிகளிலிருந்தும் நமது குத்பாவைக் கேட்டுக் கொண்டிருக்கிற பாகிஸ்தானிகளிடம் கூறுகிறேன். நமது நாடு இறை கட்டளைகளுடன் தூரத்து தொடர்பு கூட இல்லாதவர்களின் கையில் உள்ள கைக்குட்டையாகி விட்டது. மேலும் இறைவன் எதனை தடுத்துள்ளானோ அது அங்கு சாதாரணமாகி விட்டது. இப்பிரிவினரே இன்று ஆட்சியாளர்களின் தோளில் சவாரி செய்து கொண்டு அவர்களின் கழுத்தில் கடிவாளம் போட்டு பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் விளைவை நாம் தினமும் நெருப்புகள், கிளர்ச்சிகள், கொலைகளின் வடிவில் காண்கின்றோம். சொல்லப்போனால் முழு அரசு அமைப்புமே தீவிரவாதிகளின் சாயலால் நிறமாறி விட்டது. பாகிஸ்தான் உருவானதிலிருந்து அஹ்மதிய்ய கலீஃபாக்கள் அரசியல்வாதிகளுக்கும் பொதுமக்களுககும் அறிவுரை கூறி வந்தார்கள். மதச்சார்பு, தீவிரவாதி சிந்தனைகளின் பக்கம் நாட்டை இழுத்துச் செல்ல விரும்புகின்ற பிரிவுகளிடமிருந்து எச்சரிக்கையாக இருங்கள் என்று கூறி வந்தனர்.

பொதுமக்கள் தமது குறைமதி, அப்பாவித்தனம், இஸ்லாத்தின் மீது கொண்ட நேசத்தின் காரணத்தால் இந்த தீவிரவாத விரும்பிகளின் ஏமாற்றத்தில் விழுந்து கொண்டே சென்றனர். பிறகு ஏழ்மை அவர்களை சிந்திக்க வாய்ப்பளிக்கவில்லை. ஏழைகளே அங்கு அதிகமாக உள்ளனர். அரசியல்வாதிகள் தமது சுயநலத்திற்காக மார்க்கச் சட்டையைப் போட்டுக் கொண்ட இப்பிரிவினருடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். அவர்களுடன் இணையாமல் தாம் அரசியலில் ஜொலிக்க இயலாது என்று கருதினர். தாம் வெற்றி பெற்ற முடியாது என்று கருதினர். ஒவ்வொரு கட்சியும் ஏதாவது மார்க்க சட்டை அணிந்த பிரிவினரின் ஒத்துழைப்பின்றி நாம் நிலைக்க முடியாது என்று கருதியது. பிறகு தெரிந்து கொண்டே இந்த இஸ்லாமிய குத்தகைதாரர்களுக்கு தேவையில்லாத முக்கியத்துவம் தந்து சட்ட ஒழுங்கை சீர்குலைத்தனர். இந்நிலை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. சிவில் அமைப்பு நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் நிர்பந்தத்திற்கு ஆளாகிறது. இந்த தீவிரவாதிகளின் கடும் ஆயுதங்களுக்கு முன்னர் ராணுவம் ஒரு பொருட்டே இல்லாமல் ஆகி விட்டது. இந்நிலையில் ஓர் அஹ்மதியின் உள்ளம் நிம்மதி இழக்கிறது. ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொடுத்து பெற்ற இந்த நாட்டை இந்த சுயநலவாதிகளான இஸ்லாமிய பெயர் தாங்கிய வரம்பு மீறியவர்கள் இந்த நிலைக்கு தள்ளி விட்டனர். வெளிப்படையாகப் பார்க்கும் போது பெரும் முயற்சி செய்தாலும் இந்த அநியாயக்காரர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற அஹ்மதிகளால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் ஒவ்வொரு பாகிஸ்தானுடைய நாட்டுப்பற்று கொண்டவரின் எண்ணமும் விரும்புவதாவது, நாம் இந்த நாட்டிற்காக முயற்சி செய்ய வேண்டும். துஆ செய்ய வேண்டும். இந்த நாட்டினர் தம்மை அனைவரையும் விட அதிகமாக நாட்டுப்பற்று கொண்டவராக கருதுகிற பெயர் தாங்கிகள் நம்மீது என்ன தான் தேசத்துரோகிகள் என்ற அபாண்டத்தைச் சுமத்தினாலும் – நம்மீது எத்தனை அநீதிகளை கட்டவிழ்த்து விட்டாலும் நாம் நாட்டு நலன்களை கருத்தில் கொண்டவாறு நாட்டுக்காக துஆ செய்து வர வேண்டும்.

இந்த நாட்டை இந்த அபாயகரமான சூழலிலிருந்து பாதுகாப்பதற்காக செய்யத் தகுந்த ஒரேயொரு விஷயம் நமது துஆதான். பாகிஸ்தானுக்கு எதிராக உலகின் நடவடிக்கைகளும் கடுமையாக இறுகிக் கொண்டே செல்கிறது. நாட்டினுள்ளும் குழப்பம், கிளர்ச்சி, இனவெறியின் நெருப்புகளை மூட்டி நாட்டை அழித்து பலவீனப்படுத்திக் கொண்டே செல்கின்றனர். இது என்ன நாட்டுப்பற்று? இந்த தீவிரவாத அமைப்புகளின் செயல்களிலிருந்து இதனையே நாம் பார்த்து வருகிறோம். நிச்சயமாக இந்த நாட்டில் நாம் அஹ்மதிகள் அநீதியிழைக்கப்பட்டு வருகிறோம். அஹ்மதிகளாகிய நமது எல்லா உரிமைகளையும் பறிக்க முயற்சி செய்யப்படுகின்றது. அரசியல், ஆட்சி விஷயத்தில் நமக்கு எந்த கொடுக்கல் வாங்கலும் தொடர்பும் இல்லை. உலகியல்வாதிகளின் கணக்கு அது. அவர்கள் தான் நம்மைப் பற்றி அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு ஒழுங்கான ஜமாஅத் ஆக இருக்கிறது. எனவே நேரம் வரும் போது நாட்டில் ஆட்சியை கைப்பற்ற விரும்பும் என்று கருதுகின்றனர். ஆனால் நமக்கு பாகிஸ்தான் ஆட்சியின் மீது ஆர்வமோ அல்லது உலகின் வேறு எந்த நாட்டின் ஆட்சியின் மீதோ ஆர்வம் இல்லை. ஆம்! ஒரு நாட்டின் குடிமகன் என்ற முறையில் அந்த நாட்டின் மீது விசுவாசமுள்ள தொடர்பு வைத்துள்ளோம். ஒவ்வொரு நாட்டின் அஹ்மதிக்கும் தமது நாட்டை பிற நாடுகளை விட சிறப்பானதாக காண்பதற்கு விருப்பமும் உள்ளது. அதற்காக அவர் முயற்சியும் செய்கிறார்; துஆவும் செய்கிறார். செய்யவும் வேண்டும்.

ஒவ்வொரு அஹ்மதியும் அந்தந்த நாட்டின் அல்லது அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்படுகின்றனர். உலகில் பல நாடுகளில் அஹ்மதிகள் அங்குள்ள ஆளும் கட்சிகளுடன் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை தருகின்றனர். அல்லது எதிர்கட்சிகளுடன் சேர்ந்து கூட நாட்டின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை வழங்குகின்றனர். ஆகவே, ஒவ்வொரு அஹ்மதிக்கும் அந்த நாட்டின் குடிமகன் என்ற முறையில் நாட்டின் அரசியல் விஷயங்களில் ஆர்வம் இருக்கிறது. அத்தகைய ஆர்வம் இருக்கவும் வேண்டும். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அல்லது அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு ஏதாவது ஒரு நாட்டை கைப்பற்றி விட வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. அது நமது நோக்கமுமில்லை. ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் நம்மிடம் காட்டிச் சென்ற வழி பௌதீக ஆட்சியைப் பெறுவதற்குரியதன்று. மாறாக ஆன்மீக ஆட்சியைப் பெறும் வழியைத்தான் காட்டிச் சென்றார்கள். அல்லாஹ்வின் திருப்தி என்ற கிரீடத்தைப் பெறுவதுதான் நமது நோக்கமாகும். ஆம்! எப்போதாவது அந்தந்த

காலத்தின் ஆட்சியின் முன்னேற்றம் மற்றும் நிலைப்பாட்டிற்காக தியாகம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டபோதெல்லாம் அஹ்மதிய்யா ஜமாஅத் அதில் பங்கெடுத்துள்ளது. நாம் அஹ்மதிகள் ஆவோம். பாகிஸ்தானில் தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் எல்லாவிதமான அநீதிக்கு உள்ளாகியிருந்த போதிலும் தமது நாட்டிற்கு பிரச்சனைகள் ஏற்பட்ட போது நமது நிம்மதியிழப்பு ஆட்சியைப் பெறுவதற்காக இருந்ததில்லை. மாறாக, நாட்டின் நிலைப்பிற்காக நாம் நிம்மதியிழந்தோம். மேலும் நமது வாய்ப்பு வசதிக்கேற்ப உலகம் முழுவதும் சுற்றியாவது நாட்டை இந்த துயரத்திலிருந்து மீட்க முயற்சி எடுக்கிறோம். இந்த நற்செயலை நமது வழிகாட்டியும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய போதனைக்கேற்ப செய்தோம். அன்னாருடைய நடைமுறையின்படி நடக்க முயற்சி செய்ததனால் இதனை செய்தோம். நமது வழிகாட்டியும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனைத்தான் நம்முன் எடுத்து வைத்துள்ளார்கள். இறைவனும் இதனைத்தான் நமக்கு வழிகாட்டியுள்ளான். நமது அன்பிற்குரிய ரஸூலுடைய வழிகாட்டியின்படி செல்வதை இறைவன் நமக்கு கடமையாக்கி உள்ளான். உங்கள் துக்கங்களை மறந்து மனித குலத்திற்கு சேவை ஆற்றுங்கள் என்பது தான் நமது எஜமானரின் போதனையாகும். இது எந்தவித கூலியைப் பெறும் நோக்கத்திலும் அல்ல. மாறாக கருணை உணர்வின் அடிப்படையில் – அன்புணர்ச்சி அடிப்படையில் ஈதாயில் குர்பா (உறவினர்களுக்கு கருணை காட்டுவது போன்று கருணை காட்டும் உணர்வு) வின் அடிப்படையில் செய்தோம். நமது நாட்டில் வசிப்பவர்கள் நமது உறவினர்கள் ஆவர். நல்லியல்பு கொண்டவர்களை பொறுத்தவரை மற்றவருக்கு துன்பம் நேரிட்டாலும் கூட அதனால் வருந்துகின்றனர். இவர்களோ நம்மவர்களாக உள்ளனர். இவர்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் அதற்காக நம்மால் எவ்வாறு நிம்மதியிழக்காமல் இருக்க முடியும்?

நமக்கு இருந்த குழப்பங்களுடன் எந்த தொடர்பும் இல்லை. நாம் எளிமை, அன்பு, நேசம் ஆகியவற்றை பரப்புகின்றவர்கள் ஆவோம். நாம் ஒரு நபியை ஏற்றிருப்பவர்கள். அந்த நபிமார்கள் மார்க்கம் தூரத்தில் இருப்பதைக் கண்டு உலகம் இறைவனின் கோபத்திற்கு ஆளாகிவிடக்கூடாதே என்று நிம்மதியிழந்தார்கள். தமது இரவுகளை அந்த துயரத்திலேயே கழித்தவர்களாக இருந்தனர். இறைவனை மறந்து அழிவின் விளிம்பில் போகிறார்களே என்று நிம்மதியிழந்தார்கள்.

அன்னாரின் வேதனையைக் கண்டு இறைவன் அவர்களைப் பார்த்து கூறினான். **அவர்கள் நம்பிக்கையாளர் ஆகவில்லை என்பதற்காக நீர் ஒரு வேளை உம் உயிரையே மாய்த்துக் கொள்வீர் போலும் (26:4)**

நாம் நமது எஜமானர் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்தினராக தம்மை காட்டிக் கொள்பவர்கள் மீது அனுதாபம் கொண்டுள்ளோம். இம்மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனையைப் புரிந்து கொண்டு அவர்களது மஸீஹ், மஹ்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் முயற்சி செய்கிறோம். இவ்வுலகிலும் அதன் மூலம் இறைவனது ஆபத்துகளிலிருந்து அவர்கள் தப்பிக்க வேண்டும். மறு உலகிலும் இறைவனின் பிடியிலிருந்து தப்பிக்க வேண்டும்.

கடந்த பல வருடங்களாக குத்பாக்களிலும் பல சொற்பொழிவுகளிலும் கூறி வருகின்றேன். பூமியதிர்ச்சிகள், வெள்ளம் போன்ற ஆபத்துகள் கடந்த ஒரு சில வருடங்களாக கடுமையாக உள்ளன. இது இறைவனால் அனுப்பப்பட்டவருக்கு ஆதாரவாக உள்ளன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகத் தெளிவாக கூறியுள்ளார்கள். இறைவன் என்னிடம் கூறியுள்ளான். பூமியதிர்ச்சிகள், வெள்ளம் மற்றும் ஆபத்துகள் எனக்கு ஆதரவாக வரும்.

இவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்திலும் வந்தன. அவர்களின் காலத்திற்குப் பிறகும் இந்த இறை உதவிகள் தொடர்கின்றது. மற்ற உலக நாடுகளைப் போன்றே இந்த ஆபத்துகள் பாகிஸ்தானிலும் ஏற்படுகின்றன. ஆனால் அங்கு சுற்றுப்பயணம் செய்த ஓர் அமைப்பின் அறிக்கையின்படி இங்கு ஏற்பட்ட அழிவுகள் பல சுனாமிகளின் அழிவை விட அதிகமாகும். ஒவ்வொரு அஹ்மதிக்கும் தெரியும். ஒவ்வொரு வானத்து ஆபத்துகளும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக வருகின்றன. அந்தோ! உலகம் இதனைப் புரிய வேண்டுமே!

இந்த தண்டனை உலகில் வரும்போது அவை நம்மை நிம்மதியிழக்கவும் செய்கின்றன. உலகம் இறைவனது அடையாளங்களைப் புரியவில்லை எனில் பல அழிவுகள் வரலாம். இந்த நிம்மதிக் குலைவால் நமது கவனம் மீண்டும் நம்மை படைத்தவன் பக்கம் திரும்புகிறது; நமது அல்லாஹ்வின் பக்கம் திரும்புகிறது. அவன் உலகை சீர்திருத்துவதற்காக தனது அன்பிற்குரியவர்களை, தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அனுப்பியவனாவான்.

பாகிஸ்தான் பத்திரிகைகளும் மீடியாக்களும் கூச்சலிடுகின்றன. இது இறை தண்டனையா? என்ன? அவர்களின் மார்க்க வழிகாட்டிகள் அவர்களிடம் கூறுகின்றனர். இது அல்லாஹ்வுடைய தண்டனை அல்ல; ஏனெனில் இறைவனின் தண்டனை நபிமார்களுடன்தான் வரும்.

அல்லாஹ்வுக்காக நாங்கள் கூறுவதைக் கேளுங்கள். மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பேச்சைக் கேளுங்கள். இறைவனின் மஸீஹ் உடைய தூதுச் செய்தி கடந்த நூறு வருடகாலமாக உங்களை எச்சரித்துக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு ஆபத்து உலகில் வரும்போதெல்லாம் நம்மை நிம்மதி குலைய வைக்கிறது. வருங்காலத்தில் இதனை விட பெரிய ஆபத்து வந்து விடக் கூடாதே? என்ற எண்ணம் வருகிறது. ஆபத்துகளின் போது ஜமாஅத்தே அஹ்மதிய்யாவைப் பொருத்தவரை முடிந்த அளவு சேவை செய்கிறது. தற்போது நிகழ்ந்து வருகிற வெள்ளப்பெருக்கிற்காகவும் அஹ்மதிய்யா ஜமாஅத் பணம் திரட்டி அனுப்பியுள்ளது. தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் பணம் திரட்டியுள்ளது. நாட்டிற்கு உள்ளேயும் வெளியிலும் ஜமாஅத் சகோதரர்கள் இதற்காக உதவி செய்துள்ளனர். நிதியாகவும், பொருளாகவும் நமது தன்னார்வத் தொண்டர்கள் உதவிகள் செய்துள்ளனர். மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லுதல், உணவுக்கு ஏற்பாடு செய்தல்; அதுமட்டுமின்றி நமது குழு அங்கு சென்றபோது காதியானிகள் எல்லாருக்கும் முன்னால் உதவிக்கு வருகின்றனர் என்று கூறியுள்ளனர். நமது குழு வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை அங்கிருந்து வெளியேற்றும் போது மார்க்க மத பாகுபாடில்லாமல் எல்லாருக்கும் சேவை செய்தனர். Humanity First மூலமாகவும் சேவை செய்யப்பட்டு வருகிறது. Humanity First அமைப்பு இன்னும் ஒரு மில்லியன் டாலர் அதிகப்படியாக தேவை என்று கூறியது. எந்தப் பாகுபாடுமின்றி நாம் அங்கு உதவி செய்து வருகிறோம்; செய்யவும் வேண்டும்.

மேலும் நாம் அங்கு சென்று நாங்கள் அஹ்மதிகள் என்று கூறுவதும் இல்லை. ஏனெனில் குழப்பவாதிகள் யாரும் அதனையும் குழப்பத்திற்கு காரணமாக்கி விடக்கூடாது என்பதற்காக அமைதியாக சேவை செய்கிறோம். தேவையுள்ளவர்களுக்கு நமது உதவிகளை சென்று சேர்க்க இயலாமல் போய்விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்துள்ளோம். ஆனால் இந்த மார்க்க குத்தகைக்காரர்களான பெயர்தாங்கிகள் செய்தது என்ன? இவர்கள் தம்மை இஸ்லாத்தின் பிரதிநிதிகள் என்கிறார்கள். தர்யாக் பகுதியில் தெரிய வந்தது. அங்குள்ள சில அஹ்மதி குடும்பத்தினர் வெள்ளப்பெருக்கினால் பாதிப்புக்கு உள்ளாயிருந்தனர். அவர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறி வந்த போது இவர்கள் அஹ்மதி குடும்பத்தினர் என்பது இந்த பிரிவினருக்கு தெரிய வந்த போது, இவர்கள் அஹ்மதிகள் இவர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்றனர். ஆனால் அந்த அஹ்மதி குடும்பம் சுயமாக ஏற்பாடு செய்து விட்டது. ஆனால் ஒரு பள்ளிக்கூடத்தில் தங்க ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒதுங்கிய போது, ஒரு காதியானி கூட இங்கு இருக்க முடியாது என்று அங்கிருந்து வெளியேற்றி விட்டனர்.

அஹ்மதிகள் ஒவ்வொருவரையும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் கவனித்து கொண்டது. ஜமாஅத் எவரையும் திக்கற்றவர்களாகவும் விடாது. அதுமட்டுமின்றி இறைவனும் அஹ்மதிகளை திக்கற்றவர்களாக விடமாட்டான். அவர்களுக்கு எல்லா ஏற்பாடும் செய்யப்பட்டு விட்டது. ஆனால் இம்மக்களின் தீய இயல்பு இதிலிருந்து தெரிய வந்துள்ளது. இவர்கள் தான் தம்மை இஸ்லாத்தின் பிரதிநிதி என்று கூறுகின்றனர். இறைவன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் பெயரால் எத்தகைய ஒரு தீய இயல்புக்கு ஆதாரம் காட்டியிருக்கிறார்கள்?

இந்த சூறாவளியும் வெள்ளப்பெருக்கும் லாஹூரில் உள்ள நமது மஸ்ஜிதில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு வந்துள்ளது. அப்பாவிகளின் மீது குண்டுகளால் விளையாடப்பட்டது. இந்நிகழ்ச்சிகளைல்லாம் நடந்த

பிறகும் கூட ஒரே நாட்டினரின் துயர் கண்டு ஜமாஅத் உடனே உதவிக்கு வந்தது. ஜமாத்தினரின் தியாகத்தின் அளவு இன்னும் அதிகமானது. நமது மஸ்ஜிதுகளில் நடந்த ஷஹாதத்தின் போது பார்த்தோம். இறந்தவர்களின் ஜனாஸா கூட வீடுகளிலிருந்து எடுக்கப்படவில்லை. அதற்குள் அந்த முஹல்லாவாசிகளின் தரப்பிலிருந்து மகிழ்ச்சிக்காக இனிப்பு வழங்கப்பட்டது. இதனை விட பெரிய மார்க்க நல்லொழுக்கப் பிரிவினைச்சுவர் வெளிப்பாடு வேறென்ன இருக்க முடியும்? இதனை சில பகுதிகளிலுள்ள மவ்லவிகள் செய்துள்ளனர். பிறகு சில இடங்களில் உள்ள முஹல்லா குழந்தைகள் அஹ்மதி குழந்தைகளிடம் எங்களது குப்பைகளை வீசும் இடம் இதுதான் என்று கூறினர். எனவே சிலர் தமது வீட்டை மாற்ற வேண்டியதும் ஏற்பட்டது. ஆனால் அஹ்மதிகளின் உயர் தகுதி இந்த நிலையிலும் கூட ஒளிவீசவே செய்கிறது. உணவு மற்றும் சேதமடைந்த இடங்களை சீர்படுத்தும் பணிகளை ஜமாஅத் செய்தது. அதுவும் யார் எப்போது என்னென்ன காட்டினார் என்றெல்லாம் பார்க்காமல் ஒவ்வொருவருக்கும் உதவிக்காக சென்றனர்; உதவி செய்தனர்.

இதுவே உண்மையான இஸ்லாத்தின் நிழற்படம். இதனை அஹ்மதிய்யா ஜமாஅத் தான் செய்து வருகின்றது. இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படி நடந்து காட்டுதல் ஆகும்.

ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்கும் அவர்களுக்கு துஆவை வழங்குங்கள்; நிம்மதி வழங்குங்கள என்ற கூற்றின்படி அஹ்மதிய்யா ஜமாஅத் அமல் செய்து வருகிறது. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இதனை செய்து கொண்டே செல்லும்.

இந்த பகைமை நிலை பாகிஸ்தானில் மட்டுமல்ல. மாறாக உலகில் எப்பகுதியில் அஹ்மதிகள் மீது அநீதியிழைக்கப்பட்டாலும் ஜமாஅத் அங்கு உயர் நல்லொழுக்கத்தையே காட்டுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்தோனேஷியாவில் ஜமாஅத்தின் பள்ளிவாயில், அஹ்மதிகளின் 5-6 வீடுகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டது. மோட்டார் சைக்கிள் ஒன்று தீ வைக்கப்பட்டது. ஆனால் அங்கும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது ஜமாஅத் தான் உதவி செய்தது. இந்தோனேஷியாவில் ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள பலருக்கு, பெரும் தலைவருக்குக் கூட இதுபோன்ற பள்ளிவாயிலுக்கும் வீட்டிற்கும் தீ வைப்பவர்களை கண்டிக்கும் தைரியம் உள்ளது. அதுமட்டுமின்றி அந்நாட்டின் முன்னாள் தலைவரின் மனைவி பாதிக்கப்பட்ட அஹ்மதி வீடுகளுக்கு வந்து தமது அனுதாபத்தையும் தெரிவித்தார். அந்தோ! நமது பாகிஸ்தான் தலைவர்களின் கண்களும் கூட திறக்கட்டுமே! நல்லொழுக்கத்தையும் அரசியல் நாகரிகத்தையும் அறிபவர்களாகட்டும்!

எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் உலகத்தை அழிவிலிருந்து காப்பதற்காக முயற்சி செய்கிறார்கள்; அவ்வாறு செய்யவும் வேண்டும். காலத்தின் இமாமின் தூதுச் செய்தியை எடுத்து வைத்தவாறும் சிறப்பான துஆவின் மூலமும் இதனை தொடர வேண்டும். நமது இந்த நல்லொழுக்கத்தை எந்த அநீதியிழைப்பவரும் நம்மிடமிருந்து பறிக்க இயலாது. நமது துஆக்கள் ஒருநாள் வேலை செய்யும். அப்போது இந்த அநியாயக்காரர்களும் அநீதியும் முற்றிலும் துடைக்கப்படும். நாம் எப்போதும் துஆ செய்து வர வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு மனிதரையும் ஒவ்வொரு நாட்டையும் அநியாயக்காரர்கள் மற்றும் அநீதிகளிலிருந்து தூய்மைப்படுத்துவானாக. உலகில் குழப்பத்தை ஏற்படுத்தி நமது உரிமைக்காக போராடுவது நமது பணியல்ல. மார்க்கத்திற்காக நம்மீது அநீதியிழைக்கப்படுகிறது. அது தவிர வேறு காரணம் இல்லை. மார்க்கத்திற்காக சண்டையிடுவதை காலத்தின் இமாம் நமக்கு தடுத்துள்ளார்கள். துஆ ஒரு பெரும் ஆயுதமாகும். துஆவின் மூலமே நமது வெற்றி கிடைக்கவுள்ளது; கிடைக்கும்.

நமது அசல் நோக்கம் இறை திருப்தியைப் பெறுவதாகும். அதற்காக நன்மைகள் செய்யப்படுகின்றன. ஆனால் குழப்பம், கிளர்ச்சி ஆகியவை நம்மால் செய்யப்படமாட்டாது.

**இறைவன் கூறுகின்றான்:**

**பொருள்: இந்த மறுமை வீட்டை பூமியில் தற்பெருமையையும் குழப்பத்தையும் விரும்பாதவர்களுக்காக நாம் ஏற்படுத்தியுள்ளோம். (நல்ல) முடிவு இறையச்சம் உடையவர்களுக்கே ஏற்படும். (28:84)**

எனவே ஆகிரத்தின் மீது ஈமான் கொண்டவர்களுடன் எம்மை சேர்த்துள்ளான் என்று அறிவிக்கிறோம். பிறகு நாம் ஏதாவது ஒரு குழப்பத்தை பயன்படுத்துவது எப்படி சாத்தியமாகும்? நாம் எவ்வாறு சட்டத்தை கையில் எடுப்போம்? மனித குலத்திற்கு சேவை செய்வதை எப்படி மறுப்போம்? மற்றவர்களை எப்படி இழிவுபடுத்துவோம்? இது அனைத்தும் தக்வாவுக்கு எதிரானதாகும்.

தக்வாவே ஒரு முஃமினின் இலக்காகும். இலக்காக இருக்கவும் வேண்டும். ஏனெனில் அல்லாஹ், **(இறுதி) முடிவு இறையச்சம் உடையவர்களுக்கே ஏற்படும். (28:84)** குழப்பவாதிகளுக்கன்று என்று கூறுகின்றான்.

மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் இந்த தாக்குதல்கள், அநீதிகள், வரம்புமீறல்களின் காரணமாக நாம் இப்போது தொலைந்தோம்; இப்போது தொலைந்தோம் என்று கருதிவிடுகின்றனர். சிலவேளை சோதனைகள் அதிகமாகி விட்டால் உலகியல்வாதிகளைப் போன்று நாமும் சில வேளைகள் செய்தால் தான் பிழைக்க முடியும் என்று கருதி விடுகின்றனர். ஆனால் இறை ஜமாஅத்துகள் அவ்வாறு செய்வதில்லை. நாம் இந்த அளவுக்கு பொறுமை காட்ட வேண்டியதில்லை என்று சிலர் எனக்கு கடிதம் கூட எழுதி விடுகின்றனர். முதல் விஷயம் நான் அவர்களுக்கு கூறி விட்டேன். யுத்தம் செய்வது நமது இலக்கல்ல. நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு விட்டோம் எனில் பிறகு அவரது ஒவ்வொரு எழுத்தையும் பின்பற்றிச் செல்ல வேண்டும். பிறகு நல்லியல்பு கொண்டவர்களால் அதுபோன்று செய்ய முடிகிறது. நாம் முயற்சி செய்தால் கூட நம்மால் அதுபோன்ற வேலைகளை செய்ய முடியாது. ஏனெனில் அது நமது இயல்புக்கு மாற்றமானதாகும். நமது ரப்வாவைச் சுற்றி வசிப்பவர்களிடம் நாடு பிரிவினைக்குப் பிறகு குடியேறிய அஹ்மதிகளை முஹாஜிர் (இடம்பெயர்ந்தவர்கள்) என்று உள்ளூர்வாசிகள் கூறுவதுண்டு. உள்ளூர்வாசிகளிடம் ஏமாற்றம், பித்தலாட்டம், களவு போன்ற நடத்தைகள் இருப்பது பிரபலமாக எல்லாருக்கும் தெரிந்த விஷயமாகும். எனவே முதலில் ரப்வாவை இம்மக்களிடமிருந்து பாதுகாப்பாக வைப்பதற்கும் பெரும் முயற்சி செய்யப்பட்டது. ஒருமுறை அந்த உள்ளூர்வாசிகள் ரப்வாவில் உள்ள ஒருவரிடம் பேச்சுக்கிடையில் கூறினார். உங்களது அறிவுப்பூர்வமான சிந்தனைகள் முடியக்கூடிய இடத்தில் எமது முட்டாள்தனமான செயல்கள் ஆரம்பமாகின்றன. எனவே இவர்களோடு நம்மால் போட்டியிட இயலாது. இவர்களின் அறிவற்ற குழப்பங்களை நம்மால் செய்யவே இயலாது. இத்தகைய தூய மாற்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனையின் விளைவால் நம்மிடம் ஏற்பட்டுள்ளது. அஹ்மதியான பிறகு அம்மக்கள் கூட கணிசமாக முன்னேறியே உள்ளனர். அடுத்து நமக்கு இறைவன் மீது – இறைவாக்குறுதியின் மீது மிக உறுதியான நம்பிக்கை உள்ளது. **நல்ல முடிவு இறையச்சம் உள்ளவருக்கே (28:84)** என்று அவன் கூறியுள்ளான். அதாவது கடைசியில் இறைவன் முன் நிற்க வேண்டியுள்ளது. அங்கு இந்த குழப்பம், கிளர்ச்சிக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆம்! கேட்கப்பட்டால் தக்வாவைப் பற்றியே கேட்கப்படும். ஏனெனில் தக்வாவே இறைவன் வரை சென்றடையவிருக்கிறது.

எனவே அவன் கூறுகின்றான்:

**உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சமே அவனைச் சென்றடைகிறது. (22:38)** தக்வாவில் வளர்ச்சி பெறுவதன் மூலமே அல்லாஹ்வின் அருளால் மன்னிப்பு கிடைக்கும். அல்லாஹ் இதில் நம்மை வளர்ச்சி பெறச் செய்வானாக.

இரண்டாவது, **நல்ல முடிவு இறையச்சம் உள்ளவருக்கே (28:84)** என்று வசனத்தில் அடங்கியுள்ள தெளிவான பொருள், இறைவனின் ஜமாஅத்துகளுக்கு குழப்பங்கள், கிளர்ச்சி, பெருமை மூலமாக வெற்றி பெற வேண்டியதில்லை. மாறாக பணிவு அல்லாஹ்வின் திருப்தியை எப்போதும் விரும்புதல் மூலமே வெற்றி கிடைக்கும். இதன் மூலமாகவே நாமும் வெற்றியின் காட்சியைக் காண்போம் இன்ஷா அல்லாஹ். இந்த அநீதி, குழப்பம், சதி விஷமங்கள, தற்காலிகமானவை. விரைவாக முடியப் போகின்றவை. உலகில் பெரும் பெரும் பிர்அவ்ன்கள் தோன்றினர். பெரும் பெரும் அநியாயக்காரர்கள் உருவாயினர். சர்வாதிகாரிகள் தோன்றினர். பெரும் வல்லமை படைத்தவர்கள் வந்தனர். ஆனால் எல்லாரும் அழிந்து விட்டனர். இறை ஜமாஅத்திற்கு எதிராக நின்ற அந்தக் கூட்டத்தினர் எதிர்த்து நிற்கக் காரணம் இந்த மக்கள் சிறிது சிறிதாக

வளர்ந்து வருகின்றனர் என்பது தான். ஒரு காலத்தில் நமது உயர்நிலையையே முடிவுக்கு கொண்டு வந்து விடுவர் என்ற பயமும் அதற்கு காரணமாகும். நான் ஏற்கனவே கூறினேன். உலகவாதிகளாக இருப்பதால் மேற்கொண்டு அவர்களின் சிந்தனை செல்வதில்லை. இவர்கள் தொடர்ந்து பரவி நமது ஆட்சியை பிடித்து விடுவார்களோ என்று பயப்படுகின்றனர். ஆனால் இறை ஜமாஅத்துகளின் நோக்கம் அடியார்களை இறைவனுடன் இணைப்பதுதான் இந்த நோக்கத்தைக் கொண்டுதான் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றினார்கள். ஆனால் பிர்அவ்னிய பண்பு கொண்ட மக்கள் தமது ஆற்றல்களையே இறைவனாக்கி பொதுமக்களின் முன்பு வைக்கின்றனர். அதற்கு ஆபத்து வரும் போது, இந்த அடியார்கள் இறைவனுடையவர்களாகும் போது நமது கடவுள் (ஆகிய ஆற்றல்கள்) அழிந்து விடும் என்று நினைக்கின்றனர். பிறகு அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக காட்டப்படுகின்ற அடையாளங்களைப் பார்க்கும் போது இவர்களின் உள்ளங்களில் இந்த (அஹ்மதி) மக்கள் கண்டிப்பாக வெற்றி பெற்றே தீருவர் என்ற எண்ணம் உள்ளத்தில் அமருகின்றது. இந்த எண்ணம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனால் பகைமையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பிறகு தடைகளைப் போடுகின்றனர். பிறகு அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர்களின் காலத்தில் அல்லது அவர்களின் ஜமாஅத் வளர்ச்சி பெறும் காலத்தில் மார்க்கப் போர்வை அணிந்தவர்கள் இறைவனது ஜமாஅத்திற்கு கிடைக்கும் இறை உதவிகளைப் பார்த்து, நமது சொற்பொழிவு மேடைகளுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டது என்ற பயம் ஏற்படுகிறது. பிறகு வெளிப்படையாகவும் எதிர்க்க முயற்சி செய்கின்றனர். அநீதி, வரம்பு மீறலிலும் எல்லை தாண்டுகின்றனர். பொய், சதியிலும் முன்னேறுகின்றனர். மக்கள் முன் எது உண்மை எது பொய் என்ற வித்தியாசம் தெரியாத அளவுக்கு நிலைமை ஆகி விடுகிறது. மார்க்கத்தின் பெயரால் இரத்தம் சிந்தி தமது பிரசங்க மேடைகளை தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றனர். இந்த எதிர்ப்புகள் எல்லாம் அவர்களது உள்ளத்தில் உள்ள பயத்தினால் ஏற்படுகிறது. இம்மக்கள் வெற்றி பெறவே போகிறார்கள் என்று அவர்களுக்கு தென்பட்டதால் இதனை செய்கின்றனர். அத்தகைய மக்கள் தமது ஆசணங்கள், சொற்பொழிவு மேடைகள் நழுவுவதைக் காணும் போது இறை ஜமாஅத்துகளை எதிர்ப்பதில் இன்னும் வேகம் காட்டுகின்றனர். எல்லா வகையான நல்லொழுக்கத்தையும் சட்டத்தையும் களங்கப்படுத்தி விடுகின்றனர்.

இறைவனால் அனுப்பப்பட்டவரின் வெற்றியின் மீது உறுதி இல்லையெனில் பிறகு இவ்வளவு திட்டமிட்ட எதிர்ப்பை காட்டுவதற்கு என்ன தேவை?

இந்த திட்டமிட்ட கட்டுக்கோப்பான எதிர்ப்புகள் தான், இன்றில்லாவிடில் நாளை தாம் ஒழியப் போகிறோம் என்ற உறுதி அவர்களிடம் ஏற்பட்டிருப்பதை நமக்கு சுட்டிக் காட்டுகிறது. இதனை அவர்களில் பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர். தமது அவைகளிலேயே இதனை கூறியும் உள்ளனர். இறைவனது தெளிவான சாட்சிகள் அஹ்மதிகளுடன் இருக்கின்றன.

பாகிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் ஜமாஅத்திற்கு எதிராக திட்டமிட்டு முயற்சிகள் செய்கின்றனர். சில இடங்களிலிருந்து நமக்கு தெரிய வருவதாவது, அவர்கள் ஏசுகின்றனர். இந்த ஜமாஅத் வளர்ந்து வருகிறது. இது உண்மைதான். நாம் இவர்களை எளிதாக பழகவிடக் கூடாது. அவ்வாறு விட்டால் நமது நாற்காலிகள் போய் விடும். பெயர் தாங்கி இமாம்களில் இமாமத்தும் போய் விடும் என்று நினைக்கின்றனர்.

ஆனால் அல்லாஹ் இந்த குழப்பம் விளைவிப்பவர்களின் முடிவு எவ்வாறு இருக்கும் என்று அடையாளம் காட்டியுள்ளான்.

இவர்களின் குழப்பம், கிளர்ச்சி, அநீதி, செல்வம், வல்லமை போன்றவை சென்ற காலத்திலும் இவர்களை காப்பாற்ற முடிந்ததில்லை. வருங்காலத்திலும் இறை இயக்கத்தின் எதிரிகளை இவை காப்பாற்ற முடியாது.

எனவே நான் மீண்டும் கூறுகிறேன். இவர்கள் இன்று இவ்வளவு ஆபத்துகளுக்குப் பிறகும் தாம் பாதுகாப்பாக இருப்பவர்களும் கூட ஒருபோதும் பாதுகாப்பில் இல்லை. இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

**ஏனெனில் பூமியில் அவர்கள் பெருமையடித்தனர். மேலும் தீய சூழ்ச்சிகள் செய்தனர். ஆனால் தீய சூழ்ச்சி, அதனைச் செய்பவர்களையே சூழ்ந்து கொள்கின்றது. (அழிந்துபோன) முன்சென்றோரின் வழியினைத் தவிர வேறொன்றையோ அவர்கள் எதிர்பார்க்கின்றனர்? ஆனால் அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த மாற்றத்தையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர். மேலும் அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த வேற்றுமையையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர். (35:44)**

இந்தப் பெருமை, ஆணவம், இறைவனால் அனுப்பப்பட்டவருக்கு எதிராக சூழ்ச்சி போன்றவை வெற்றி பெறுமா? ஒருபோதும் வெற்றி பெறாது. அல்லாஹ்வின் நடைமுறையில் எந்த மாற்றமும் இல்லை. இது அல்லாஹ்வின் அறிவிப்பாகும். சென்றுபோன நபிமார்களின் சம்பவங்கள் வெறும் கதையாக நமக்கு சொல்லப்படவில்லை. மாறாக, அதிலிருந்து படிப்பினை பெறுவதற்காகவே கூறப்பட்டுள்ளது. தமக்குள் இறையச்சத்தை உருவாக்குவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவருடன் முரண்பட்டு அவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அநீதியிழைத்து வருபவர்களின் பங்கினைப் பெறாதீர்கள். அல்லாஹ்வின் வழிகாட்டலாகிய, **அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த மாற்றத்தையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர். மேலும் அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த வேற்றுமையையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர். (35:44)** என்பதை சிந்தியுங்கள்.

அந்தோ! இம்மக்களுக்கு அறிவு வர வேண்டுமே! அல்லாஹ் நமக்கு துஆவுக்கு வாய்ப்பளிப்பானாக! உலகில் விஷயத்தில் நமது துஆவை ஏற்றுக் கொள்ளவும் செய்வானாக! இந்த அழிவின் பள்ளத்தில் விழுவதிலிருந்தும் அழிவதிலிருந்தும் பாதுகாப்பானாக. நமக்கு பொறுமையும் துணிவும் கிடைக்க துஆ செய்யுங்கள். **நல்ல முடிவு இறையச்சம் உள்ளவருக்கே (28:84)** என்ற வசனத்தை உண்மைப்படுத்துபவர்களாவோமாக.

இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைக்கிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த விஷயம் நினைவில் கொள்ளத்தக்கதாகும். இறைவன் தனது இயக்கத்தை உறுதிப்படுத்தாமல் விட மாட்டான். அவனே கூறியுள்ளான். உலகில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அல்லாஹ் அவரை ஏற்றுக் கொள்வான். வல்லமைமிக்க தண்டனைகள் மூலம் அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

எவர்கள் மறுத்தார்களோ அவர்களுக்கு இழிவு விதிக்கப்பட்டுள்ளது. இது மனிதனின் இட்டுக்கட்டாக இருந்தால் எப்போதோ அழிந்துபோயிருக்கும் என்பதை மனிதன் சிந்திப்பதில்லை. ஒரு இட்டுக்கட்டுபனுக்கு, இறைவன் எதிராக இருப்பது போன்று வேறு எவருக்கும் எதிரியாக இருப்பதில்லை. நிலைத்து நிற்றலும், இத்தகைய துணிவும் ஒரு பெரும் பொய்யருக்கு கிடைக்க முடியுமா என்பதனையும் இவர்கள் சிந்திப்பதில்லை. அறிவற்றவர் இதனையும் அறியவில்லை. ஒரு மனிதர் மறைவான அடைக்கலம் பெற்றவாறு பேசுகிறார். அவரது வார்த்தைகளில் ஓர் உற்சாகமும் இறைவனின் நன்கொடையாக விளங்கும் அருள்களும் உள்ளன. அவையே இவ்வசனங்களில் இதயமாக உள்ளன. அம்மனிதன் முழு உலகத்தை எதிர்கொள்ளவும் தயாராக நிற்கிறார். நிச்சயமாக அம்மனிதனைக் குறித்து எதிர்பார்த்துக் கொண்டிருங்கள். அம்மனிதனின் எதிரிகள் விரைவில் அழிவர். அம்மனிதனின் நண்பர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவர். அவரது நண்பர் யார்? அடையாளங்களைப் பார்க்கும் முன்பே அவரை ஏற்றுக் கொண்டவரே நண்பவராவார்.

அந்த நண்பர் அம்மனிதருக்காக தனது கண்ணியம், பொருள் அனைத்தையும் மாய்த்து விட்டார். ஆயிரக்கணக்கான அடையாளங்களைப் பார்த்தவரைப் போன்று நடந்து கொண்டார். இதுவே நானும் எனது ஜமாஅத்தும் ஆகும். அம்மக்கள் என்னை தன்னந்தனியாகக் கண்டு முழுமையாக உதவி செய்தனர். எனது கவலையைக் கண்டு ஆறுதல் அளித்தனர். என்னை சோதித்துப் பார்க்காமலேயே சோதித்துப் பார்த்தவர்கள் போன்று செயல்பட்டனர். இறைவனுடைய ரஹ்மத் அம்மக்கள் மீது ஏற்படட்டுமாக! எல்லா உண்மைகளையும் நேரடியாக பார்த்த ஒருவருக்கு அதற்குரிய கூலி என்ன கிடைக்கும்? எங்கும் நிறைந்தவனின் சந்நிதியில் அவருக்கு என்ன கண்ணியம்?

ஒருவர் என்னை உண்மையாக ஏற்றுக் கொண்டார்; உண்மையானவராகக் கண்டார்; தொலைநோக்குடன் எனது சொல்லை நம்பினார்; எனது நிலைமைகளை அறிந்தார்; எனது வார்த்தைகளைக் கேட்டார்; சிந்தித்தார்; பிறகு அவரது உள்ளத்தை இறைவன் திறந்தான்; அவர் என்னுடன் சேர்ந்து விட்டார். இம்மனிதர் தான் எனது விருப்பத்திற்காக தனது விருப்பங்களை விட்டுவிட்டவர். தனது நஃப்ஸின் விடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆகிய இரண்டு விஷயத்திலும் (அதாவது எதனை ஏற்க வேண்டும். எதனை கை விட வேண்டும் என்ற விஷயத்தில்) என்னையே நீதிபதியாக்கினார். என் வழியில் நடந்தார்; கட்டுப்பட்டார்; கட்டுப்படுதலில் தன்னை மாய்த்துக் கொண்டார்; நான் என்ற பெருமையிலிருந்து வெளியில் வந்து விட்டார். மறைத்து வைக்கப்பட்ட பைஅத்தை அறிந்து, இந்த நம்பிக்கையாளரை சந்தித்த பிறகே அந்த சிறப்பு கிடைத்தது. நான் அல்லாஹ்வுடைய போர்வையில் மறைத்து வைக்கப்பட்ட ஓர் அடியான் ஆவேன். எனவே எனது நறுமணத்தை அவர் பெற்றார். இவர் எவ்வளவு முழுமை பெற்றவர். உதாரணமாக ஒரு பெரும் இராணுவத்தில் ஒரு மனிதரின் மாண்பையும் கண்ணியத்தையும் உணர்ந்து அவரை அடைந்து அவருக்கு சலாம் கூறுகிறார். அவரே முழுமையானவர்; ஏனெனில் பெரும் பிரபஞ்சத்துக்கு மத்தியில் ஒரு மனிதனை அடையாளம் கண்டுள்ளார். இவையெல்லாம் எனது கட்டுப்பாட்டில் இல்லை. நான் விரும்பியவருக்கு இதனை தர முடியாது. ஒருவனே இதனை தருகிறான். அவன் அவரை கண்ணியப்படுத்துகிறான். தொலைநோக்கு சிந்தனையை வழங்குகிறான். அவரது வார்த்தைகளிலிருந்து நேர்வழி பெறக்கூடியவர் நேர்வழி பெறுகிறார். இதே வார்த்தைகள் எவரது உள்ளத்தில் அழுக்கு உள்ளதோ அவரது அழுக்கை மேலும் அதிகமாக்கி விடுகிறது.

அல்லாஹ் நமது ஈமானை உறுதியாக்கிக் கொண்டே செல்வானாக. உலகின் கண்களை திறப்பானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 08.10.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**